16 SEP 19 LIBRARY

# டிசம்பரில் ஜி.ஸி.ஈ. (உயர்தர) விஞ்ஞான பரீட்சை நடக்காது

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் [illegible]
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 217

யாழ்ப்பாணம் ஆவணி 31 றஜப் 25 வியாழக்கிழமை (16-9-71)

கோட்டை, புதன்

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை (உயர்தரம்) இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெறமாட்டாதென்றும் அடுத்தாண்டு ஏப்ரல் மாதத்தில்தான் நடைபெறுமென்றும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

க. பொ. த பரீட்சை (உயர்தரம்) விஞ்ஞானப் பாடங்கள் மட்டுமல்லாது கலைத்துறைப் பாடங்களின் பரீட்சைகளும்கூட இனி ஏப்ரல் மாதத்தில்தான் நடைபெறுமென்று அறியப்படுகிறது.

## அமைச்சரவை ராஜினாமா

ஹைதராபாத், செப். 15

ஆந்திராவின் பிரமானந்த ரெட்டி அமைச்சரவை இராஜினாமா செய்துள்ளது.

திரு. பிரமானந்தரெட்டி நேற்று தனது அமைச்சரவையின் இராஜினாமாவை ஆந்திர கவர்னர் தர்மவீராவிடம் சமர்ப்பித்துள்ளார்.

வேறு ஏற்பாடுகள் செய்யும் வரைபதவியில் இருக்குமாறு திரு. பிரமானந்த ரெட்டியை கவர்னர் கோரியுள்ளார்.

## சிறுபான்மை தமிழ் மக்கள்

# மனித உரிமையோடு வாழ வழி வகுப்போம்

## மறுப்போருக்கு கடுந்தண்டனை

### யாழ்ப்பாணத்தில் உதவி பாதுகாப்பு அமைச்சர்

நமது நிருபர் ஏ. வி. மாணிக்கம்

யாழ்ப்பாணம் வியாழன்

சிறுபான்மைத் தமிழர்கள் எதிர்காலத்தில் மனித உரிமையோடு தலைநிமிர்ந்து வாழ வழிவகுப்போம் என்று நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் உதவி பாதுகாப்பு அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி உறுதியளித்தார்.

மனித உரிமைகளைக் கொடுக்கமறுப்பவர்களுக்கு கடும் தண்டனை வழங்கத்தவறமாட்டோம். சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தின் மூலம் இப்படியானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் உதவி அமைச்சர் திரு ஜெயக்கொடி எச்சரித்தார்.

யாழ். திறந்தவெளியரங்கில் நேற்று இரவு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் நியமன எம்.பியுமான திரு எம். ஸி. சுப்பிரமணியத்துக்கு நடந்த புகழ்மாலை அன்பளிப்புவிழாவில் உதவிபாதுகாப்பு மந்திரி திரு ஜெயக்கொடி பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உபதலைவர் திரு மார்டின் செல்லையா தலைமையில் நடந்த இவ்விழாவில் உதவி அமைச்சர் திரு ஜெயக்கொடி மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவதற்குள், சகல இன மக்களுக்கும் எவ்வித பேதமும் பாராட்டாமல், நற்பிரஜைகளாகத் தலைநிமிர்ந்துவாழ வழிவகுப்போம், எந்தஒரு பிரஜைக்கும் கஷ்டமோ துன்பமோ ஏற்படாமல், எமது அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கும். வடபகுதி மக்கள் கடந்தகாலங்களில் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள். நாட்டிலுள்ள சிறுபான்மை இன மக்கள் இதனை உணர்வார்கள் திரு எம். ஸி. சுப்பிரமணியம் எமது அரசாங்கத்துடன் சேர்ந்து அதன் முன்னேற்றமான கொள்கைத்

(5ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் உதவி பாதுகாப்பு அமைச்சர் ஜயக்கொடி

யாழ்ப்பாணம், வியா.

உதவிப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு லக்ஸ்மன் ஜயக்கொடி நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். அவருடன் வடபிராந்திய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. வாண்டுவிஸ்ட்டும் வந்தார். வடபகுதிப் பொலிஸ் அதிபர், கடற்படை இராணுவம் ஆகியவைகளின் வடபகுதி அதிபர்கள், அவர்களிருவரையும் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு முகாம்கள் வடபகுதியின் கரையோரப் பகுதிகள் சிலவற்றையும் அவர்களிருவரும் சென்று பார்வையிட்டதாகத் தெரிய வருகிறது.

நேற்றுப் பிற்பகல் வடபகுதிப் பொலிஸ் அதிபரின் அலுவலகத்தில் நடந்த ஒரு மகாநாட்டிலும் திரு ஜயக்கொடியும் திரு வாண்டுவிஸ்ட்டும் கலந்துகொண்டனர். சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்ட அமுல் சம்பந்தமாகச் சில சந்தேகங்கள் இம் மகாநாட்டில் எழுப்பப்பட்டதாகவும் இதற்கு திரு ஜயக்கொடி விரிவாகப் பதிலளித்ததாகவும் அறியப்படுகிறது. இந்த மகாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் நியமன உறுப்பினருமான திரு. எம். ஸி. சுப்பிரமணியமும் கலந்துகொண்டார்.

## மருத்தித்துறை கொலை வழக்கு

# 'ஸி.ஐ.டி. சொல்லித்தந்ததை நீதவானிடம் சொன்னேன்'

## முதலாம் எதிரியின் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்

பருத்தித்துறை லொக்கப்பிலிருந்து ஜீப்பில் சிறைச்சாலைக்கு என்னை கொண்டு சென்றபோது ஜீப்பில் என்னுடன் ஸி ஐ டி. வந்தார். மறுநாள் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட் விறாந்தையிலும் ஸி. ஐ. டி. செனிவரத்னவை கண்டேன். நான் சொன்னதை மனதில் வைத்துக்கொள் என்று மெல்லிய குரலில் அவர் கூறியது எனக்கு கேட்டது. அவர் சொல்லித்தந்ததை மனதில் வைத்து மாஜிஸ்திரேட்டிடம் கூறினேன்.

பருத்தித்துறை கொலை வழக்கில் சாட்சியமளித்த 1-ம் எதிரியான ராமச்சந்திரன் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. குமார் அமரசேகரா குறுக்குவிசாரணை செய்கையில் முதலாவது எதிரி ராமச்சந்திரன் கூறியதாவது:

என்னை ஜீப்பில் கொண்டு செல்லும்போது பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஸி. ஐ. டி. ஏறினார். யாழ் பொலிஸ்நிலையம் வரை அவர் வந்தார். சங்கிலி, காப்பு செய்ய தாயாரிடம் பழைய நகைகளை வாங்கினேன்.

வழ: இருமணமாகாத 3 சகோதரிகள் இருக்க உமது தாயார் அட்டியலையும் 2 சோடி காப்புகளையும் தருவாரா?- திருப்பி தருவதாகக் கூறினேன்.

வழ: சொந்தப் பாவிப்புக்கு என்றீரா?- வியாபாரம்செய்யவென்றேன்.

வழ: நகைகளிலிருந்து வேறு நகைகள் செய்யவில்லை?- இல்லை.

வழ: தாயாருக்கு என்ன கொடுத்தீர்?- சங்கிலி கொடுத்தேன்.

வழ: இந்த வழக்கில் உமது தாயாரும் ஒரு சாட்சி?- ஆம்.

வழ: எத்தனை வகுப்பு படித்திருக்கிறீர்?- 8-ம் வகுப்பு.

வழ: பொலிசில் இருக்கும்போது அடித்தவர்களா?- ஆம்.

வழ: பொலிசாருக்கு ஒரு வாக்குமூலமளித்தீர்?- இல்லை.

ராமச்சந்திரன் தொடர்ந்து கூறியதாவது: பொலிசார் நான்தான் கொலை செய்தது என்றார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் தில்லைவனம்பிள்ளை

யாழ்ப்பாணம் லக்ஷ்மிவிலாஸ் ஹோட்டல் உரிமையாளர் திருமதி சிவபாக்கியம் தில்லைவனம்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஆ. தில்லைவனம்பிள்ளையின் பாரியாரும், திருமதி சுப்பலக்ஷ்மி சிவநாதன், சங்கரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கண்ணம்மாள், மாணிக்கம் அன்னம்மா நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்காலை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். சிவநாதனின் மாமியாருமாவார். அன்னாரது பூதவுடல் இன்று (16-9-71) காலை 11 மணியளவில் நீராவியடி கொலிஜ் ரோட், 44/4 இலக்க இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 2661

## வரிவிளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும் ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

காலம் பெறுமதியானது. ஒரு பைக்கட் மிக்க்வைத் சலவைப்பவுடரின் அநேக துணிகளை சலவைசெய்யலாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் மிக்க்வைத் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

### விற்பனைக்கு

தேவைக் கதிகமாயிருக்கும் நல்ல நிலையிலுள்ள ஒரு பெக் ஸ்பிறிங் கட்டில், மூன்று கதிரைகள், தொட்டில், ஈஸிசெயர் முதலியன விற்பனைக்குண்டு. 179, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 3583

சக்தி பூஜா ஊதா பத்திகள்: ஈழநாட்டில் ஈடு இணையற்ற சிறந்த நீண்டநேரம் எரியும் தெய்வீக நறுமணம் கொண்ட பத்திகள். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்துக்கடை, கொழும்பு-யாழ்ப்பாணம். 3523

சங்கானை-பாடசாலை, பிரதான வீதி, ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். திருமதி கனகரத்தினம், பிளாக் ரோட், சங்கானை. 3582

### வாடகைக்கு

பாடசாலை, ஆஸ்பத்திரி, ரயில் நிலையம் ஆகியவற்றுக்குச் சமீபமாக சகல வசதிகளுடனும் கூடிய வீடு யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்க: 33, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம். 3581

### விற்பனைக்கு

நவராத்திரிமாலை; சக்தி பூஜைக்குரிய பாடல்கள் (சரஸ்வதி வணக்கம், இலக்குமிதுதி, பராசக்திவணக்கம்) சக்தி தத்துவத்தை விளக்கும் கதைகள், சக்தி தத்துவக் குறிப்பு முதலியன அடங்கிய "நவராத்திரி மாலை" விற்பனைக்குண்டு. சகல புஸ்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தனலக்குமி புஸ்தகசாலை, சுன்னாகம். விலை: சதம் 70. 3575

### தவறிவிட்டது

தின்னவேலி வடக்குச் சங்கக்கடையில் தம்பிமுத்து, சின்னச்சி, ஆரோக்கியம், யேசுதாசன், சின்னமலர், ஜோன்போச், டெய்சிரோசபெல், அருளானந்தம், திரேசம்மா, சோபனு, மாறன் ஆகியோரின் புத்தகப் கங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி சங்கக்கடையில் கொடுக்கவும். 3585

### கல்வி

மார்கழியில் ஜி. சி. ஈ. பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு விஞ்ஞானப் பாடங்கள், நேரில் அல்லது தபால் மூலம் சிறந்தமுறையில் போதிக்கப்படும். R. N. செல்லத்துரை அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 3584

### தேவை

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்திற்குத் தற்காலிக நாளாந்தச் சம்பளத்தில் விகிதர்கள் (இருபாலாரும்) தேவை.

தராதரம்

1. சி. பா. த. அல்லது க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்திபெய்தியவரும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்கவேண்டும்.

2. சி. பா. த. அல்லது க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்திபெய்தியவரும், தூயகணிதம் அல்லது எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், கணக்கியல் ஆகியவற்றில் இரண்டில் விசேட சித்தி பெற்றிருக்கவேண்டும்.

3. வயது 18க்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்

4. தட்டெழுத்துப் பயிற்சி உள்ளவர்கள் விரும்பத்தக்கது

5. வேதனம் தகுதிக்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறு கொடுக்கப்படும்

6. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பயிற்சி உள்ளவர்களுக்கு விசேட சலுகையுண்டு.

விண்ணப்பங்கள் எல்லாம் பதிவுத்தபாலில் பொதுமுகாமையாளருக்கு 27-9-71 க்கு முன் அனுப்பவேண்டும்

சு சிவநாதன்
பொதுமுகாமையாளர்
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்

பரந்தன்
15-9-71 3025

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம் புதிமழவை கொல்லங்கலட்டி அருள்நெறிக்கழக வருடாந்தக் கூட்டம் சரவணமுத்து தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சரவணமுத்து உபதலைவர்கள்: ஐ மகாலிங்கம், வே சங்கரப்பிள்ளை, த சரவணபவான், பொதுச்செயலாளர் சே தனபாலசிங்கம், நிர்வாகச் செயலாளர்: நா போஜன், தனாதிகாரி: ஆ காசிநாதன் உபதனாதிகாரி ஸ்ரீ பாஸ்கரலிங்கம் கணக்கு பரிசோதகர்கள் ச கனகரத்தினம், வ சுந்தசாமி.

அரசாங்க பொது எழுதுவினைஞர் பரீட்சை:

## 'சிற்றூழியரின் தகவுத் திறனைக் குறைக்கவும்'

குருநகர், புதன்

அரசாங்க சிறுவூழியர் பதவி உயர்வுக்கான 1971 ஒக்டோபர் பரீட்சைக்கு தற்போது கோரப்பட்டுள்ள தகவுத்திறன் தமிழ் அரசாங்க சிற்றூழியர்களை பாதிக்கக்கூடியதாக இருப்பதால் இப் பரீட்சைக்குத் தோற்ற பதவி உறுதிப்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் பூர்த்தியாகி இருக்கவேண்டுமெனக் கோரியிருப்பதை நீக்கி ஒரு ஆண்டு பூர்த்தியானவர்களுக்கு இப் பரீட்சையில் தோற்ற அனுமதிபெற்றுத்தருமாறு அரசாங்க பொதுசேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளை தாய்ச்சங்கத்தை கேட்டுள்ளது.

மேற்படி சங்க செயலாளர் எஸ். ஆறுமுகம் அக்கடிதத்தில் கேட்டுள்ளதாவது:

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தியெய்திய அரசாங்க சிற்றூழியர்கள் மத்திய எழுதுவினைஞர் பரீட்சைக்கு தோற்றலாமென்று முன்னர் கூறப்பட்டிருக்கின்றது. இப்போது அத் தராதரமுடையவர்கள் 5 ஆண்டுகள் பூர்த்தியாயிருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றலாம் என்று கூறப்பட்டிருப்பதால் சிங்களத் தகைமை காரணமாக பதவி உறுதிப்படுத்தப்படாது 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியுள்ள தமிழ் ஊழியர்கள் இப் பரீட்சை எடுக்காமல் பாதிக்கப்பட இடமிருக்கின்றது

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தியெய்தியும், சிங்களம் சித்தியெய்தி ஒருவருடம் பூர்த்தியாகியுமிருக்கும் எத்தனையோ சிறு ஊழியர்கள் பதவி உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் பதவி உறுதிப்படுத்தப்பட்டு 5 வருடம் கழிந்திருக்கவேண்டும் எனக் கோரப்பட்டிருப்பதால் பல தமிழ் ஊழியர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே 1971-10-30ல் நடக்கவிருக்கும் மத்திய எழுதுவினைஞர் பரீட்சைக்கு தமிழ்ப் பகுதியிலுள்ள அரசாங்க சிறு ஊழியர்கள் தோற்றுவதற்கு அதிற் கேட்கப்பட்டுள்ள தகவுத்திறன் ஒரு ஆண்டு என குறைக்கப்பட வேண்டுமெனவும், இது பற்றி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 16—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

249 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை. 7-00 நதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசைவேலை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 ஓடி விளையாடு பாப்பா, 6-35 பெண்ணுலகம், 7-00 தமிழ் மூலம் சிங்களம், 7-45 வாத்திய இசை 8-00முஸ்லிம்நிகழ்ச்சி 9-30 இசை அரங்கம், 10-30 செய்தித் தொகுப்பு.

## சாகிரா வெற்றி

புத்தளம், புதன்

விளையாட்டு அமைச்சினால் புத்தளம் காசிபாதிகாரி பிரிவில் ஒழுங்கு செய்யப்படும் ஜனுப் பி சி எம் ஹனிபா வெற்றிக் கேடயத்திற்காக நடைபெறும் போட்டியில் சாகிரா மகா வித்தியாலய கோஷ்டியும் ஜுவலினல் கோஷ்டியும் மோதிக் கொண்டன. இப் போட்டியில் சாஹிரா 4—3 கோல்களால் வெற்றி பெற்றது.

## அரபு சமஷ்டிக் குடியரசில் சூடான் சேரும்

கார்ட்டூம், செப். 15


எகிப்து லிபியா சிரியா ஆகிய மூன்று நாடுகளும் அமைக்கும் அரபு சமஷ்டிக் குடியரசில் 1972-ம் ஆண்டில் சூடானும் சேர்ந்துகொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனல் எந்தத் திகதியில் சூடான் சேர்ந்துகொள்ளுமெனத் தெரிவிக்கப்படவில்லை.


இன்று [16-9-71] முதல்

லிடோ [யாழ்நகர்]

(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)

இங்ஸ்லி (கொழும்பு) மைலன்



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் கதை - வசனம் - டைரக்ஷனில் உருவாகி

ஜெமினி—வாணிஸ்ரீ — முத்துராமன்

சுந்தரராஜன்—நம்பியார் - நாகேஷ் - வாசு நடித்த

# தபால்காரன் தங்கை

உள்ளத்தைத்தொடும் 5-வதுவாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00

# தெய்வ மகன்



சிவாஜி

[3 மாறுபட்ட வேடங்களில்]

ஜெயலலிதா

நம்பியார் — நாகேஷ்

சுந்தரராஜன்

நடித்தது.

நாகம்ஸ்சினிமா

கன்னாகம்

தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30

THE BIG JOB

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-காஞ்சனா
நடித்த

'சாந்தி நிலையம்'

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் சினிமா

சாவகச்சேரி

பி ப 2-30, 6-30, 10-00
சிவாஜி - கே. ஆர். விஜயா

ஊட்டிவரை உறவு

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Stephen Boyd
Camilla Strav
in
ASSIGNMENT K
(Technicolor)

தினசரி பி.ப. 2-00, 9-45
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த

நாடோடி

(புதிய கொப்பி)

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி — சரோஜாதேவி
ரவிச்சந்திரன் — பாரதி

தினசரி 2-30 6-30 10-00 சனி, ஞாயிறு 10-30 நடித்த

# சிநேகிதி

ராணி (யாழ்ப்பாணம்)

ஜெமினி - சரோஜாதேவி
நடித்த

தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்

# சிநேகிதி

ராஜா (யாழ்ப்பாணம்)

ரி. எம். சௌந்தரராஜன்
ஏ. எல். ராகவன்; ராஜ்ஸ்ரீ
நடித்த

தினசரி 4 காட்சிகள்

# கல்லும் கனியாகும்

வின்சர் [யாழ்ப்பாணம்]

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா

நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த

# சங்கமம்

# பாக். ஜனாதிபதி யாஹ்யாகான ஈரானுக்கு திடீர் விஜயம்

## பாகிஸ்தானுக்கான சுவீடிஷ் உதவி குறைப்பு

கராச்சி, செப். 15
பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான் ஈரானுக்கு திடீர் விஜயம்மேற்கொண்டுள்ளார். இதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

கிழக்குப் பாகிஸ்தானில் தொழில், வர்த்தகம், கல்வி, செய்தித் தொடர்பு ஆகியவற்றில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ள தென்பதைகிழக்குப்பாகிஸ்தான் கவர்னர் டாக்டர் மாலிக் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியாஹ்யாகான் மக்கள் கட்சித்தலைவர் சுல்பிகார் அலிபூட்டோவுடன் பேச்சுவார்த்தை நடத்தி இரு நாட்களின்பின் ஈரானுக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டு தெஹ்ரான் சென்றுள்ளார். பெரும்பாலும் இவர் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள பிரச்னைகள் பற்றியே ஈரான் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனச் சொல்லப்படுகிறது.

சிலநாட்களுக்குமுன் ஈரானுக்கான பாகிஸ்தான் தூதுவர் தனது ஆதரவைத் வங்காள தேசத்திற்கு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

**ஆஸ்.பிரதமர் கடிதம்**

இந்தியாவுக்குள் வந்திருக்கும் பாகிஸ்தான் அகதிகள் பிரச்னைபற்றியும் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு முடிவுகாண அங்கு அரசியல் தீர்வு காண படவேண்டிய அவசியம் குறித்தும் பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு இரு கடிதங்களைத்தான் அனுப்பிவைத்ததாக ஆஸ்திரேலிய ஆட்சிமன்றத்தில் ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. மக்மான் தெரிவித்தார்.

ஷேக் முஜிபுர் விசாரணையை கருணையோடு நோக்குமாறுதாம் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்திய பாகிஸ்தான் நெருக்கடியைத் தீர்ப்பதற்குவேண்டிய ஏற்றதான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் திரு. மக்மான் எழுதியுள்ளார்.

**சுவீடன் உதவி குறைப்பு**

1971-72ம் ஆண்டுக்கு பாகிஸ்தானுக்கு சுவீடன் 1 கோடியே 90 ஆயிரம் குரவுண் நிதிஉதவி அளிக்க விருந்தது. இவ்வுதவியை 24 லட்சமாக சுவீடன் குறைத்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானுக்கு உதவியளிக்கும் எந்த ஒப்பந்தத்தையும் சுவீடன் பாகிஸ்தானுடன் செய்துகொள்ளாதெனத் தெரியவருகிறது.

**கி.பாக.சேதம்**

இதே நேரத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் தொழில், வர்த்தகம், கல்வி, செய்தித் தொடர்பு, போக்குவரத்துப் போன்ற துறைகளில்பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், சாமூக நிலைமை திரும்புவதற்கு பலவருடங்களாகுமென்று திக்காகானுக்குப் பதிலாக கிழக்குப்பாகிஸ்தானில் சிவில் கவர்னராக நியமிக்கப்பட்ட டாக்டர் ஏ. எம். மாலிக் கூறியுள்ளார்.

**யூதாண்ட் வருத்தம்**

இந்தியா வந்திருக்கும் அகதிகள், அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலை கிழக்குப் பாகிஸ்தானில் தோற்றுவிக்கப்படாதவரை திரும்பிச்செல்லமாட்டார்கள் என்று தெரிவித்த ஐ.நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் தான் யூலைமாதம் 20ந் திகதி அனுப்பிவைத்த குறிப்புக்கு அமைய பந்தோபஸ்து சபை நடவடிக்கை எடுக்காததற்கு வருத்தம் தெரிவித்தார்.

**.00 பேர் சுட்டுக்கொலை**

சில்கட் அரங்கிலுள்ள ரஜப்பூர் பகுதியில் ஆற்றைக் கடந்து கொண்டிருந்த பாகிஸ்தான் அகதிகளை பாகிஸ்தான் இராணுவம் சிறுபடகில் சென்று சுட்டுக்கொன்றதாக அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

'பாக்.இந்தியா

## இருநாடுகளுக்கும் இராணுவ உதவி அளிக்கக்கூடாது'

**முன்னாள் அமெரிக்கத் தூதுவர் கருத்து**

புதுடில்லி, செப். 15
கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தங்கள் அரசியல் பொறுப்புக்களையும், தங்கள் விதியின் பொறுப்புக்களையும் தீர்மானிக்க அனுமதிக்கப் படவேண்டும். இவ்வாறு அமெரிக்கப் பேராசிரியரும் இந்தியாவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதருமான திரு. கால்பிரெய்த் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், மேலும் கூறுகையில், கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையினால் பாகிஸ்தானில் பொருளாதார நஷ்டம் ஏற்படும். இதனால் மேற்குப் பாகிஸ்தானியரே அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். எந்தப் பிரச்னையையும் இராணுவ அதிகாரத்தினால் அடக்க முடியுமே தவிர தீர்க்க முடியாது. எனவே கிழக்குப்பாகிஸ்தானில் அரசியல் தீர்வுகாணப்படவேண்டும் என்றார்.

இந்தியாவுக்கோ பாகிஸ்தானுக்கோ இராணுவ உதவியளிப்பதைத் தாம முற்றாக எதிர்ப்பதாக வலியுறுத்திக் கூறிய அவர், இவ்விரு நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிகள் அளிப்பது வரவேற்கவேண்டியதென்றார்

தேவாலயத்தில் குண்டு வெடிப்பு

## அமெரிக்க செனட்டர் படுகாயம்

சைகோன், செப் 15
சைகோனிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் குண்டொன்று வெடித்ததில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அமெரிக்க செனட்டர் காயத்துக்குள்ளானார். இவர் 1972ம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக அறியப்படுகிறது. வணக்கத்திற்காக இவர் சில மாணவர்களுடன் ஆலயத்துக்குள் சென்ற பொழுதே இக்குண்டு வெடித்ததாம்.

தேவாலயத்திற்குவெளியே நிறுத்தப்பட்ட வண்டி ஒன்றும் நீக்கிரையானது. அமெரிக்க அதிகாரி ஒருவரும் மற்றும் பலரும் இவ்விபத்தில் காயமடைந்தனர்.

**அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்**

சைகோன் நகரில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பெருமளவில் நடைபெற்றுள்ளது. நடக்கவிருக்கும் தென்வியட்னாம் அதிபர் தேர்தலை எதிர்த்து இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை.

### காளான் மகத்துவம்

லண்டன், செப் 15
பெருமளவில் காளானைப் பயிர்செய்யும் முறை பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 15 கோடி ரூபாய்க்கு காளான் இவ்வருடம் இங்கு உற்பத்திசெய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் மிருகவைத்திய சங்க மகாநாட்டில் பேசிய பேராசிரியர் ஆர் ஜேல் ஸ் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில் மனிதருக்கு மிக அவசியமான புரதச் சத்தைக் காளானிலிருந்து பெறமுடியுமெனவும் உலகின் உணவுத் தேவைகளைப் பெருமளவில் இது பூர்த்தி செய்யக்கூடியது என்றும் குறிப்பிட்டார்.

இறைச்சியைவிட மேலான போஷாக்கு அளிக்கத்தக்க புரதம் நிறைந்த இக்காளானில் இருந்து தயாரிக்கப்பட்ட உணவுவகை மலிவான விலையில் விற்பனைக்கு விடப்படும் எனவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

### "நல்லறம் செய்க"

அரியாலை, புதன்
'இளமையிலேயே நல்லறம் செய்து பழக வேண்டும் ஆலயத்தில் தொண்டு செய்வதால் பக்குவமடையலாம்" என்று மீசாலை கரும்பிமானடிக் கந்தசுவாமி கோவில் மணவாளக் கோலவிழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் சைவப்புலவர் ஆ.கி. ஏகாம்பரம் கூறினார்.

மேலும் அவர் தமதுரையில் சமய நூல்களையும் புராண இதிகாசங்களையும் இளம் வயதில் படித்து சமய அறிவு பெறுவதால் சுட்டாயம் வாழ்வு சிறக்கும் என்றார்.

## மற்றுமொரு பாக். தூதுவர் வங்காளத்திற்கு ஆதரவு

**பாகிஸ்தானிலுள்ள தன்பிள்ளைகளை இறைவன் காக்க வேண்டுமாம்**

கியுகோன்சிட்டி (லுகோன்) செப் 15
பிலிப்பைன்ஸிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் திரு குரம்ஹான் பன்னி, வங்காள தேசத்திற்கு தன் ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

வங்காளதேசத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ள இரண்டாவது பாகிஸ்தான் தூதுவர் இவராகும். இவருக்கு முன் ஈரானுக்கான பாகிஸ்தான் தூதுவர் வங்காள தேசத்திற்குத் தன் ஆதரவைத் தெரிவித்திருந்தார்.

திரு. குரம்ஹான்பன்னி பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் கிழக்குப்பாகிஸ்தானில் இனக்கொலைநடந்து கொண்டிருப்பதை யாரும் மறைக்கவோ பார்த்துக் கொண்டிருக்கவோ முடியாது. ஆயிரக்கணக்கான மனித உடல்களின் குவியலின்கீழும், குழந்தைகள், பெண்கள் ஆகியோரின்துன்பத்தின்கீழும், இப்பொழுது பாகிஸ்தான் இருக்கிறது. எனக்கு இரு புதல்வர்கள் இருக்கிறார்கள். திருமணமான அவர்களில் ஒருவர் கராச்சியிலும் மற்றவர் டாக்காவிலும் இருக்கிறார்கள். இவர்கள் விதியை ஆண்டவன்தான் தீர்மானிக்கவேண்டும் என்றார்.

இவர் பத்திரிகையாளர்களுக்கு நிலைமையை விளக்கிக் கொண்டிருக்கும் பொழுது பிலிப்பைன்ஸ் பொலிசார் இவர் இருந்த இடத்தைக் காவல் காத்தனர். இதுபற்றி இவரிடம் கேட்டபொழுது தனது வேண்டுகோளின்பேரிலேயே அவர்கள் தம் பாதுகாப்புக்காக காவல் காத்து நிற்பதாகச் சொன்னார்.

......

**அகில உலக பௌத்த கழகம்**

லண்டன், செப் 15
அகில உலக பௌத்த கழகத்தினது முதலாவது வருடாந்தக்கூட்டம் லண்டனில் வண டாக்டர் சத்ததிஸ தேரோ தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் இக்கழகத்தினரால் ஒரு பௌத்த வெளியீடு வெளியிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் இதற்கான ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.

**துணி ஆலைகள் மூடப்படுகின்றன**

கராச்சி, செப் 15
மேற்குப் பாகிஸ்தானில் கராச்சி மற்றும் பிரதான பட்டினங்களில் உள்ளதுணி ஆலைகள் மூடப்படுகின்றன.

இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலையின்றிக் கஷ்டப்படுகிறார்கள். கிழக்கு வங்கத்திலிருந்து மூலப்பொருள் கிடைக்காமையும், கிழக்குவங்க பிரச்சினையால் ஏற்பட்ட உள்நாட்டின் பொருளாதாரச் சீர்கேடுமே இத்துணி ஆலைகள் மூடப்படுவதற்குக் காரணமாகும் எனக் கூறப்படுகிறது.

......

**மருந்துத் தட்டுப்பாடு**

சங்கானை, புதன்
சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர் வெளி இடங்களில் பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்து மருந்து வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

**யுதாண்ட் உறுதி**

வாஷிங்டன், செப் 15
1971-ம் ஆண்டுக்குப்பின் ஐக்கிய நாடுகள் சபைப் பொதுக் காரியதரிசிப் பதவியில் தொடர்ந்து இருக்கப் போவதில்லை என யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

யுதாண்டை இப்பதவியில் தொடர்ந்து இருக்கச் செய்வதற்கு முயற்சி செய்த பல நாடுகளிடம் தாம் இதை வலியுறுத்திக் கூறியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐ நாவில் தைவானையும் கம்யூனிஸ்ட் சீனாவையும் உறுப்பு நாடுகளாக வைத்திருப்பதால் ஏற்படக்கூடிய பிரச்னைகள் அமெரிக்க அதிபர் நிக்சனின் சீன விஜயத்தினால் குறையும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## 'பாடசாலையில் பெற்றோரின் பங்கு'

உரும்பராய், புதன்

"கல்வி இந்நாட்டில் வளர்வதற்குப் பாடசாலைகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் சங்கங்களே காரணமாயிருந்தன. அரசாங்கம் எல்லா வகையான சேவைகளையும் செய்யுமென்று பெற்றோர்கள் இருக்கக்கூடாது. பெற்றோர்களும் பாடசாலைக்கு நன்கு உழைக்க முன்வர வேண்டும்."

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்க ஆதரவில் பண விழாவையொட்டி நடைபெற்ற கலைவிழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. சுந்தரையா பேசுகையில், கல்வி வளர்ச்சியிலேயே நாட்டின் வளம் தங்கியுள்ளது. நல்ல கல்வி இல்லாத நாடு ஒருபோதும் முன்னேற மாட்டாது. மாணவர்கள் கல்வியில் முன்னேறப் பெற்றோர்-ஆசிரியர் முயற்சி இன்றியமையாதது என்றார்.

வித்தியாலய அதிபர் திரு. ச. முத்தையா, பிரதம விருந்தினர் கல்வி இலாகா கணக்காளர் திரு. சு. இராசையா, திரு. செ. சிவப்பிரகாசம், திரு. ஆ. பஞ்சாட்சரம், திரு. சி. எஸ். நடராசா ஆகியோர் பேசியதை அடுத்து மாணவர்களது கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஆசிரியை திருமதி சரவணமுத்து மகேஸ்வரி நன்றியுரை கூறினார்.

## யாழ்ப்பாணம் வருகிறார்

அளவெட்டி, புதன்

இலங்கையில் தற்போது சுற்றுப்பிரயாணம் செய்யும் சுவாமி சாந்தானந்தா இம்மாதம் 20-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். இவரை பலாலி விமான நிலையத்தில் யாழ்ப்பாணம் திவ்விய ஜீவனசங்கத்தினர் வரவேற்பார்கள். இவர் இங்கு சுமார் பத்து தினங்கள் தங்கியிருப்பார். நல்லூர் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் இவரது சொற்பொழிவு இடம்பெறும்.

## கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை காசிப் பிள்ளையார் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகவிழா நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை யடுத்து தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் நிகழும். தினமும் விசேஷ சொற்பொழிவுகள் இடம் பெறும்.

### ஒரே தினத்தில் லட்சார்ச்சனை

கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு கீரிமலை கிருஷ்ணர் ஆலயத்தில் ஒரே நாளில் லட்சார்ச்சனை நடாத்தப்பட்டது.

இதுகாலம் வரை லட்சார்ச்சனை நிறைவு பெற 10 தினங்கள் வரை சென்றன. முதல் தடவையாக கீரிமலையில் சிவஸ்ரீ வேதாரணியக் குருக்கள் தலைமையில் 10 குருமார் சேர்ந்து இவ் அர்ச்சனையை செய்தனர். காலை 10 மணியளவில் ஆரம்பமாகிய அர்ச்சனை இரவுவரை நடைபெற்றது. இதையடுத்து சங்காபிஷேகம் நடைபெற்றது.

அம்பன், புதன்

நாகர்கோயில் கரையூரிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் ஒரு மைல் நீளமான பாதையை அவ்வூர் மக்கள் சிரமதானமூலம் அமைத்துவருகின்றனர்.

## மாநகரசபை கண்காணிப்புக் குழு

யாழ்ப்பாணம், வியா

மாநகரசபை வேலைகளைக் கணிப்பதற்கு யாழ் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மூவர் கொண்ட கண்காணிப்புக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

இக்குழு 24 மணி நேரமும் தொடர்ந்து பணியாற்றும். இக்குழுவிலுள்ள ஒவ்வொருவரும் தினமும் எட்டு மணி நேரம் தொடர்ச்சியாகக் கடமையாற்றுவார்கள்.

மாநகர சபைக்குள்ளேயும் வெளியேயும் நடைபெறும் வேலைகளை இக்குழு கண்காணிக்கும். அத்துடன் பொதுமக்கள் செய்யும் புகார் பற்றியும் இக்குழு ஆராயும்.

## விஸ்தரிப்பு

சரியாலை, வியா

செம்மணி உப்பளம் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது. 100 ஏக்கர் விஸ்தீரண முடைய இவ் உப்பளம் 124 ஏக்கராக விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

## 'பஸ் சேவையை சீர்திருத்துக'

யாழ்ப்பாணம், வியா

கச்சேரி - யாழ்ப்பாண பஸ் போக்குவரத்து சீர்கெட்டிருப்பதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிமக்களின் தேவையைக் கருதி அலுவலகங்களுக்கு நேரத்துக்குப் போகும்வண்ணம் இச் சேவையைத் திருத்தி அமைக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். பஸ்போக்குவரத்

## காணிக்கச்சேரி

அம்பன், புதன்

கிராம விஸ்தரிப்பின் கீழ் காணிகள் பெறுவதற்குரியவர்களைத் தெரிவுசெய்வதற்கான காணிக்கச்சேரி வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி அந்தோனியால் அடுத்த மாதம் 18ம் திகதி காலை யாழ் மாவட்ட அரசாங்க அதிபரினால் நடத்தப் பெறவிருக்கின்றது. இத்திட்டத்தில் 7 குடியிருப்பதற்குரிய வீடுகள் உள்ள காணிகள் மட்டுமே வழங்கப்படவிருக்கின்றன. மணற்காட்டில் உள்ள இந்த 7 வீடுகளுக்கும் அம்பன், குடத்தனை கரையூர், நாகர்கோவில் ஆகிய கிராம சேவையாளர் பிரிவிலுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். விண்ணப்பிப்போர் அடுத்த மாதம் 6-ம் தேதிக்கு முன்னர் பதிவுத் தபால்மூலம் பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர். காணிப் பங்கீடுகளைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும் தாமே நேரில் சமூகமளிக்க வேண்டுமென்றும் தங்களினதும் தந்தம் பராமரிப்பிலுள்ளவர்களின் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை காணிக்கச்சேரியின் போது காட்ட வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

---

தின் சிரமேட்டினுல் மாணவர் - ஆசிரியர் ஆகியோர் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

## 'கலாச்சாரத்தைப் பாதுகாக்க அரசுக்கு உதவுங்கள்'

யாழ்ப்பாணம், வியாழன்

அன்னியர்களின் ஆதிக்கத்தின்கீழ் எமது கலாச்சாரம் அருகிவந்துள்ளது. சுதந்திரத்தின் பின்னர் நாம் சிதைந்து போன எமது பண்பாடு கலாச்சாரம் ஆகியவற்றைப் பேணிக்காப்பதில் அரசாங்கம் பெரிதும் சிரத்தைகொண்டுள்ளது. நாடு பூராவும் கலாச்சார உத்தியோகத்தர்களை நியமித்து அருகிவரும் ஈழத்துக் கலாச்சாரத்தைப் பாதுகாக்க அரசு எடுத்துவரும் முயற்சிக்குக் கலைத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு நெடுந்தீவில் நடைபெற்ற கலாச்சார விழாவுக்குத் தலைமை தாங்கிய காரியாதிகாரி திரு. ஏ. சி. செபநாயகம் கூறினார். திரு எஸ் விஜயகுமார்த்தி செல்வி க பூ விஜயகமூர்த்தி, நா சேனாதிராஜா ஆகியோரும் உரைநிகழ்த்தினர். நெடுந்தீவின் சகல நாடகமன்றங்களும் நாடகப் போட்டியில் கலந்துகொண்டன. அவற்றில் முதலாவது பரிசை நிலாஜோதி நடாகமன்றமும் இரண்டாவது பரிசை சபா நாடகமன்றமும் மூன்றாவது பரிசை நெடுந்தீவு மேற்கு நாடகமன்றமும் பெற்றுக்கொண்டன. மத்தியஸ்தர்களாக டாக்டர் மகேந்திரன் தபாலதிபர் எஸ் யோண்பிள்ளை மாவித்தியாலய அதிபர் திரு நா குருநாதன் ஆகியோர் கடமையாற்றினர்.

## குண்டுவீச்சு வழக்கு

யாழ்ப்பாணம், செவ்

திரு. துரையப்பா காருக்கு குண்டுவீசி சேதப்படுத்தியதாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ் மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மாஜிஸ்திரேட் விசாரணையை இம்மாதம் 27-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## மக்கள் கலைச்சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

பரந்தன் மக்கள் கலைச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பரந்தன் ரசாயனதொழிற்சாலை சங்க மண்டபத்தில் திரு என் கணேசரன் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு எஸ் மகேசரன் உபதலைவர்கள் திருவாளர்கள் ஏ. என். வரதராஜன், கே. யோகராசா. கே. மாணிக்கம், செயலாளர்: திரு கே என். வேலாயுதம் தனாதிகாரி: கே ராஜகோபாலன், 16 பேர் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.


# வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினுலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது. உங்களுக்குத் தேவையானது

# றொபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனுல் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினுலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றொபின் நீலம் தேவை.

றொபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனுல் முடிவில் றொபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

**ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப் பிரகாசிக்க றொபின் நீலம் பாவியுங்கள்.**

ஓர் றெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி.

GRANT

# பேய் விரட்டியவர் 'பேய்க்குப் பலி!'

குருநகர், புதன்

பேய்விரட்டும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே மயக்கமுற்று விழுந்து இறந்தாராம் பூசாரி. மனதை உலுக்கும் இச்சம்பவம் மாவத்தகம பகுதியைச் சேர்ந்த அரம்பொல என்ற இடத்தில் நடைபெற்றது.

அரம்பொல கிராமத்தைச் சேர்ந்த பேய்பிடித்ததாகக் கருதப்பட்ட பேபிசிங்ஙோவுக்கு எல்லாவித வைத்திய சிகிச்சைகளும் அளிக்கப்பட்டும் குணமாகாது போகவே கடைசி முயற்சியாகப் பேய் விரட்டும் முயற்சியைக் கையாண்டதாகவும் இதனைத் தொடர்ந்து பேய் விரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பூசாரி மயக்கமுற்று விழுந்து மீண்டும் எழாமலே உயிர்விட்டதாகவும் தெரிய வருகிறது.

இளைஞன் பேபிசிங்ஙோ வீட்டில்வைத்து அவர்மீது பூசாரி மந்திரம் ஜெபித்ததாகவும், அப்போது இளைஞன் மயக்கமடைந்ததாகவும் மயக்கமான நிலையில் அவரைச் சுடலைக்குக் கொண்டு போய் அங்கும் மந்திரம் ஜெபித்து சில ஆணிகளை மரத்தில் அறைந்ததாகவும் அப்போது அதுவரை மயக்கமுற்றிருந்த பேபிசிங்ஙோ மயக்கம் தெளிந்து எழுந்ததாகவும் அதே நேரத்தில் பூசாரி மயக்கமுற்றுக் கீழே விழுந்து ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் மரண விசாரணையில் தெரிய வந்தது.

இச்சம்பவம் பற்றி மாவத்தகம பொலிஸ் சான்ஸ்டபிள் திரு. ரொட்ரிகோ திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. விஜேரத்ன ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

# "சங்கிலிருந்து ஆபரணம் இங்கு செய்யுங்கள்"

யாழ்ப்பாணம், புதன்

"வெளிநாட்டில் நாட்டின் ஆபரணப் பொருட்களுக்கு நல்ல கிராக்கியும் மதிப்பும் ஏற்பட்டுவருகின்றது. இலங்கையிலிருந்து மூவாயிரத்திற்கும் அதிகமான சங்குகளை அனுப்புகின்றோம். அவற்றை அவர்கள் காப்பு, தோடு போன்ற ஆபரணங்களாகச் செய்து மற்றும் நாடுகளுக்கு அனுப்பி விற்கிறார்கள். ஆகவே சங்குகளிலும் ஆபரணங்களைச்செய்வதற்கு இங்குள்ள ஆபரணத்தொழிலாளர்கள் முன்வரவேண்டும். மற்ற எந்தத் தொழிலாளர்களாலும் அதைச்செய்யமுடியாது" இவ்வாறு கூட்டுறவுத் தலைமைக் காரியாலயப் பரிசோதகரான திரு. சி. இராமதாஸ் ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

யாழ்ப்பாணம் அம்பாள் ஆலயத்தில் சங்கத்தலைவர் திரு. மு. பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். நகர மேயரும், யாழ் மாநகர சபை பலநோக்குக்கூட்டுறவு சங்கத்தலைவருமான திரு ஏ. ரி. துரையப்பா கலந்துகொண்டு பேசும்போது கூறியதாவது: ஆபரணத் தொழிலாளர் கஷ்டத்தைத் தீர்க்க நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கின்றோம். அரசாங்கத்தில் என்ன உதவிகளைப் பெறலாமோ அவற்றைப் பெறுவதற்கு நாம் உதவி செய்வோம்."

தொழிற் சங்கப் பிரமுகரான திரு. அ. விஸ்வநாதன் பேசும்போது கூறியதாவது: "நம் நாட்டின் எழுபது வீதத்திற்கும் அதிகமான சாதாரண மக்கள் குறைந்த பெறுமதியான நகைகளையே அணிகிறார்கள் ஆகவே இவர்கள் அணியக்கூடிய குறைந்த பெறுமதியான நகைகளையும் ஆபரணத் தொழிலாளர் செய்யவேண்டும் அப்படிச் செய்தால் ஆபரண இறக்குமதியைத் தடைசெய்வோம் உபகரணங்களை இறக்குமதி செய்யும் விலையோ மிகவும் குறைவு. ஆனால் விற்பனை செய்யும் விலையோ மிகவும் கூடுதலாக இருக்கின்றது. இந்த லாபத்தையும் மீந்திய பணத்தையும் கடை முதலாளிமார் பெறுகின்றனர்"

யாழ். மாநகர நூலக மேற்பார்வையாளரான திரு. ஆர். அருளானந்தமும் பேசினார்.

# அதிபர்க்கு அறிக்கை

கோட்டை, புதன்

பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியர் தேவைப்படின் கல்லூரி அதிபர்கள் உடனே கல்வி அதிபருடனோ சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரியுடனோ தொடர்புகொள்ளவேண்டும். இதைவிடுத்து ஒரு சில ஆசிரியர்களை பாடசாலையில் வைத்திருக்க வேண்டி பாடங்களைக் கொடுப்பதும் அவர்களுக்கும் வகுப்புகளைப் பிரிப்பதும் தவறாகும்"

இவ்வாறு கல்வி அமைச்சு [illegible] கல்லூரி அதிபர்க்கும் அறிவித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. மேலும் இவ்வறிக்கையில் மாணவர்கள் தமக்கு விருப்பமான பாடங்களைத் தெரியும்போது அப்பாடங்களைக் கற்கப்போகிய மாணவர்கள் இருப்பின் மட்டுமே தனியான பாட வகுப்புக்களை அமைக்கலாம்.

# தமிழிசைச் சங்க இசைவிழா

யாழ்ப்பாணம், புதன்

புலோலி கிழக்கு மாதனை தமிழிசைச் சங்கத்தின் 10-வது ஆண்டு நிறைவு இசைவிழா இம்மாதம் 17, 18, 19-ந் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இசைவிழா மாதனை ஸ்ரீ காளியம்மாள் கோவில் வீதியில் நடைபெறும். முதல் நாள் நிகழ்ச்சி திரு மு தம்பிமுத்து தலைமையில் செல்வி யோகரஞ்சிதம் முருகேசு. திரு மு சாம்பசிவம், திரு பி இளையதம்பி, திரு எஸ் பாலசிங்கம் ஆகியோரின் இன்னிசைக்கச்சேரியும், திரு கெங்காதரத்தின் புல்லாங்குழலிசையும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி திரு ஏ சந்திரசேகரபிள்ளை தலைமையில் செல்வன் கே இராமநாதன் திரு கே துரைராசா திரு எஸ் கணபதிப்பிள்ளை, செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன் திரு பொன் சுந்தரலிங்கம் ஆகியோரின் இன்னிசைக்கச்சேரி இடம்பெறும். மூன்றாம்நாள் நிகழ்ச்சி திரு வி முருகேசம்பிள்ளை தலைமையில் திரு கே ஆர் நடராசா திருமதி சத்தியபாமா இராஜலிங்கம், பரம் தில்லைராசா ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும் யாழ். கலாசேத்திர மாணவிகளின் பரதநாட்டியமும் இடம்பெறும்.

## கொழும்புத்துறையில் சிறுத்தைப்புலி

குருநகர், புதன்

யாழ். கொழும்புத்துறை கிழக்கு பகுதியில் உள்ள தென்னந்தோப்பொன்றில் சிறுத்தைப்புலி ஒன்று நடமாடுவதாக அறியப்படுகிறது. இப்புலியைப் பார்ப்பதற்கு ஏராளமான பொதுமக்கள் சென்றுவருகின்றனர்.

இப்புலி இப்பகுதிக்குவந்த மர்மம் தெரியாமல் இருக்கின்றது

## 'முத்தமிழ்' கலைவிழா

யாழ்ப்பாணம், வியா.

கொடிகாமம் முத்தமிழ் கலைமணி மன்றத்தினர் அடுத்தமாதம் கொடிகாமத்தில் முத்தமிழ் கலைவிழா நடாத்த தீர்மானித்துள்ளதாக மன்றத்தலைவர் இசைப்புலவர் சி. செல்லத்துரை தெரிவித்தார்

# உண்மையான பாரதியை எங்கே காணலாம்?

யாழ்ப்பாணம், வியா

'பாரதியாருக்கென எட்டயபுரத்திலே மணி மண்டபம் அமைக்கப்பட்டது. அம்மண்டபத்திற்கு முன்னால் இலட்சக்கணக்கான தமிழ் அன்பர்கள் உட்கார்வதற்கு வசதியாக பிரமாண்டமான அலங்காரப் பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. அந்தத் தற்காலிக பந்தல் நிரந்தரமான நினைவு மண்டபத்தின் அழகை மறைத்து விட்டது. மணிமண்டபத்தின் அமைப்பையும் அழகையும் தமிழன்பர்கள் பார்க்க முடியாதவாறு பந்தல் விசுவரூபமெடுத்து நின்றது. இதேபோல் தான் பாரதியாரின் உண்மையான கவிதா ஆற்றலையும் உள்ளொளியையும் காட்டும் கவிதைகளை, அவருடைய தேச விடுதலைப் பாடல்கள் விசுவரூபமாய் மறைத்து நிற்கின்றன. உண்மையான பாரதியை நாம் தரிசிக்க வேண்டுமானால், அவருடைய பாஞ்சாலி சபதம், குயிற்பாட்டு, கண்ணன் பாட்டு போன்றவற்றைப் படிக்க வேண்டும்'

இவ்வாறு உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாரதி விழாவிற் பேசிய இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. தேவன் குறிப்பிட்டார். இவ்விழாவுக்கு செல்வன் அன்ரன் ஜேசுதாசன் தலைமை தாங்கினார். மன்றப் பொறுப்பாசிரியர் திரு. ஐ. வரதராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எவ்வளவோ வீரமும் தீரமும் ஆண்மையும் ஆற்றலும் வாய்ந்த பாண்டவர்கள் இருக்கவும் துச்சாதனன் துகிலுரிந்தபோது, திரௌபதி கண்ணனைத்தான் கடவுளைத்தான் அழைத்தாள். மானிட சக்தியை விடக் கடவுள் சக்தி மேலானது என்பதைத்தான் இது காட்டுகின்றது. ஆகவேதான் பாரதியார், புதுமை புதுமையென்று புதுமையைப் பற்றியும், விஞ்ஞான கலை நுட்பங்களைப் பற்றியும் பாராட்டிப் பாடிய போதிலும் பழமையிலும் பழமையான இறைவனை மறக்கவில்லை, மறுக்கவில்லை. சக்திபெல்லாம் தா என்று சக்தியைத்தான் கேட்டார் பாரதியார்'

மாணவிகள் பாரதி பாடல்கள் சிலவற்றைப் பாடினார்கள் செல்வன் வி. இராசநாயகம் நன்றி கூறினார்.

## சி.ஐ.டி...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

சி. ஐ. டி. சொல்லித் தந்ததை மாஜிஸ்திரேட்டிடம் சொன்னேன் அப்படி சொன்னால் முடிக்குரிய சாட்சியாகலாம் என சி. ஐ. டி. சொன்னார். நான் நம்பிவிட்டேன் முடிக்குரிய சாட்சியாக வந்தால் தப்பிவிடலாம் என நினைத்தேன் பொலிசார் என்னை தனியப்பிடித்தார்கள். மற்றவர்களை பிடித்ததுபற்றி எனக்குத் தெரியாது.

என்னை அடித்துவிட்டு நான் கூறுவது போல் சொல்லவேண்டுமென்றார். இந்தக் கொலையில் எனக்கும் சம்பந்தம் உண்டென்று கூறு பொலிசார் அடித்தனர் எனக்கொன்றும் தெரியாது என்றேன், நீ தப்ப வேண்டுமென்றால் நான் சொல்லித்தருவது போல் கூறவேண்டுமென சி ஐ டி சொன்னார், 4 பேர் சேர்ந்து திட்டம்போட்டதாகவும் நான் கொலை செய்ததாகவும் சொல்லித்தந்தார் நடராசா தவராசா செல்வராசா ஆகியோரை சொல்லும்படி கூறினார்.

தவராசா திட்டம்போட்டதாகவும், நடராசா, செல்வராசாவும் கடைக்கு வெளியின் நின்றதாகவும் நான் உள்ளேசென்று குத்தியதாகவும் சொல்லச் சொன்னார். இப்படிச் சொன்னால்தான் என்னைத் தப்பவைக்கலாமென்றார். நான் நம்பிவிட்டேன்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## நேற்று செனட்டில்...

கோட்டை, புதன்

செனட்சபை இன்று பிற்பகல் கூடியது. வாழ்க்கைச் செலவு சம்பந்தமாக தனிப்பட்ட அங்கத்தவர் பிரேரணை மீது விவாதம் நடைபெற்றது. நாளை செனட் சபை மீண்டும் கூட்டப்பட வேண்டுமென்ற எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை செல்லுபடியாகாதென்று செனட்சபைத் தலைவர் நிராகரித்தார். மீண்டும் செனட் சபை இம்மாதம் 21ம் திகதி 2-30 மணிக்கு கூடும்.

## அஞ்சலி செலுத்தினர்

பொற்பதி மகிஸ்டார் விளையாட்டுக் கழகம் அதன் தலைவர் ஜனாப் எம். எஸ். எம். மாமூதின் தலைமையில் கூடி காலஞ்சென்ற டாக்டர் ச. எம். வி நாகநாதனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## மனித உரிமை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களுக்கு ஒத்துழைப்பு அளித்ததால் தான் இன்று நான் இந்த மேடையில் உரிமையுடன் நின்று பேசக்கூடியதாக இருக்கிறது.

சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தில் இன்னும் சில திருத்தங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து நாம் அபிப்பிராயத்தைக் கோருகிறோம். உங்கள் அபிப்பிராயங்களை ஏற்று, ஏற்ற நடவடிக்கை எடுப்போம்.

கிணறுகளில் தண்ணீர் அள்ளவோ, கோயில்களுக்குள் செல்லவோ இந்தச் சட்டம் அனுமதிக்கிறது. இந்தச் சட்டத்தை நாட்டில் அமுல் படுத்த உங்கள் பூரண ஒத்துழைப்பு எமக்குத் தேவை சிறுபான்மைத் தமிழ் மக்கள் மனித உரிமையுடன் எதிர்காலத்தில் வாழ வாக்குறுதி அளிக்கிறேன்.

சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை அமுல் செய்ய ஒத்துழைக்கும் வடபகுதி பொலிசாருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகர, நியமன எம்.பி. திரு. ரொட்ரிகோ, திரு ஏ. வைத்திலிங்கம், திரு. டொமினிக் ஜீவா, திருமதி வேதவல்லி கந்தையா, எஸ். இராசையா, எஸ். செல்லையா, எம் பி திரு. ஹேரத், எம் பி. எச் டி சில்வா, ஆகியோர் பேசினார்கள். திரு தம்மணி, திரு. எம் லிங்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்து அளித்தார்.

உதவி பாதுகாப்பு மந்திரி திரு. ஜெயக்கொடி புதிய காரின் சாவியை திரு. எம் எஸ் சுப்பிரமணியத்திடம் கையளித்தார்.

திரு. எம். ஸி. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

# பிரிட்டிஷ் அமைச்சரின் பேச்சு விபரம் கோருகிறது இஸ்ரேல்

ஜெருசலம், செப். 15

மேற்காசியப் பிரச்னை தீர்வதற்கு முதற்படியாக சூயஸ் கால்வாய் திறக்கப்பட வேண்டுமென்ற கருத்தில் எகிப்திய ஜனாதிபதி திரு. அன்வார் சதாத்துக்கும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூமுக்குமிடையே கருத்தொற்றுமை நிலவியதாகச் சொல்லப்படுகிறது.

கெய்ரோவில் தங்கியிருந்த காலத்தில் திரு. ஹியூம் பேசிய பேச்சுக்களினதும், அடுத்த அறிக்கைகளினதும் பிரதிகளை தமக்குத் தருமாறு இஸ்ரேல் அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

நேற்று திரு ஹியூம் எகிப்திய ஜனாதிபதி அன்வார் சதாத்துடன் தனது இரண்டாவது சுற்றுப் பேச்சை ஆரம்பித்தார். மேற்காசியப் பிரச்னையை சமாதான வழியில் தீர்ப்பதுபற்றி அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

1956ம் ஆண்டு சூயஸ் கால்வாய் பிரச்னையில் பிரிட்டனுக்கும் எகிப்துக்குமிடையே நடைபெற்றயுத்தத்திற்குப்பின் எகிப்துக்குச் சென்று அத்தலைவர்களோடு பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் பேச்சுவார்த்தை நடத்துவது இதுவே முதல் தடவையாகும்.

திரு. ஹியூம் பிரிட்டிஷ் எகிப்திய பேச்சுவார்த்தைகளின் மேற்காசியப் பிரச்னைக்கு அமைதித்தீர்வு காண அமெரிக்கா எடுக்கும் முயற்சிக்கு இடையூறு ஏற்படாதென பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

திரு. ஹியூம் இன்று மொராக்கோவுக்கு விஜயம் செய்கிறார் அங்கு மொராக்கோ மன்னருடனும், மற்றும் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## மணிவாக்கு

ஒருவனுக்கு ஆகாரம் அளிப்பதைவிட அதை அவனே தேடிக்கொள்ள வழிகாட்டுவதே முக்கியம். ஒருவனுக்கு உதவிசெய்வதைவிடப் பிறர்க்கு உதவிசெய்ய அவனுக்குக் கற்றுக்கொடுப்பதே நலம்.
—ஆவ்பரி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 31-ந் திகதி (16-9-71)


## திரைப்படத் தொழில்

இலங்கையில் தயாராகும் தமிழ்ப்படங்கள் இந்தியாவுக்கு விரைவில் ஏற்றுமதி செய்யப்படுமென்றும் இதற்கான நடவடிக்கைகளை வர்த்தக அமைச்சும் தகவல் ஒலிபரப்பு அமைச்சும் கூட்டாக மேற்கொள்ளுமென்றும் வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்னவும் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஆர். எஸ். பெரேராவும் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்திருக்கின்றனர். இது நல்ல முயற்சி. தமிழ்ப்படங்கள் மட்டுமல்ல இங்கு தயாரிக்கப்படும் சிங்களப் படங்களும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும்.

விரைவில் திரைப்படக் கூட்டுத்தாபனம் அமைக்கப்படவிருப்பதாகவும் அது அமைக்கப்பட்டதும் அதன் முதல் நடவடிக்கை இலங்கையில் தயாராகும் தமிழ்ப் படங்களை இந்தியாவில் திரையிடும் பொருட்டு ஏற்றுமதிசெய்வதாகுமென்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் அந்த மகாநாட்டில் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் திரைப்படங்கள், தமிழ் சஞ்சிகைகள் சம்பந்தமாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லையென்றும் இந்தியாவிலிருந்தே இவை இலங்கைக்குப் பெருமளவில் வந்து சேருகின்றனவென்றும் இந்த ஒருவழிப் பாதை முறைக்கு ஒரு முடிவுகாணவேண்டுமென்றும் இங்கு அடிக்கடி குரல் எழுப்பப்படுவதுண்டு. இந்தியத் தமிழ்த் திரைப்படங்களின் இறக்குமதியையும் தமிழ்ச் சஞ்சிகைகளின் இறக்குமதியையும் தடை செய்யவேண்டுமென்றும் அல்லது கட்டுப்படுத்த வேண்டுமென்றும் இங்கு பலரும் பலவித யோசனைகள் தெரிவித்து வந்தனர். ஆனாலும் பயனுள்ள காரியம் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

இலங்கையில் தயாராகும் தமிழ்த் திரைப்படங்களை இந்தியாவில் திரையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக அமைச்சர்கள் தெரிவித்திருப்பது ஆக்கபூர்வமான இந்திய மக்களும் வரவேற்கக் கூடிய நல்லதொரு முயற்சி.

திரைப்படத் தயாரிப்பிலும் திரைப்படத் தொழிலிலும் இலங்கையுடன் ஒப்பிடுகையில் இந்தியா வெகுவாக முன்னேறியுள்ளதென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். இதே சமயம் இலங்கையில் சிங்களத் திரைப்படத் தொழிலின் முன்னேற்றத்துடன் தமிழ்த் திரைப்பட உற்பத்தியை ஒப்பிட்டுப் பார்க்க முடியாத நிலையிலிருக்கிறது. தமிழ்த் திரைப்படத் தொழிலை தென்னிந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாதென்றும் இது குழந்தைப் பருவத்திலிருக்கிறதென்றும் கூறப்படும் வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. விண்வெளி ஆராய்ச்சியில் முன்னணியில் நின்ற சோவியத் யூனியனை அமெரிக்கா இன்று மிஞ்சிவிடவில்லையா?

இலங்கையில் தமிழ்த் திரைப்படத் தொழிலுக்கு வாய்ப்பும் வசதியும் ஆதரவும் குறைவு என்பதும் ஓரளவு ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால் இதுவரை இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களுக்குச் செலவிடப்பட்ட தொகையை விடக் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட சிங்களப் படங்கள் சில சிங்கள மக்களின் பாராட்டுதல்களை மட்டுமல்லாது சிங்களம் பேசாத மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறதென்பதையும் நமது நாட்டு மக்களின் கலை, கலாசாரத்தையும் வாழ்க்கையையும் நாட்டின் சூழ்நிலையையும் இயற்கைக் காட்சிகளையும் செவ்வனே எடுத்துக் காட்டக்கூடிய முறையில் இங்கு தமிழ்ப் படங்களைத் தயாரிக்க முடியும். இதைச் செய்தால் நிச்சயம் இந்தியா உட்பட வெளிநாடுகள் பலவற்றிலும் இலங்கைத் தமிழ்ப்படங்களுக்கு மதிப்பு ஏற்படுமென்று சொல்லலாம்.

நடிப்புத்துறையில் மட்டுமல்லாது திரைப்படத் தொழில் நுட்பத் துறையிலும் தமிழ்நாடும் இந்தியாவும் பெருமளவில் முன்னேற்றம் கண்டிருப்பதால் ஒருசில வருடங்களுக்காவது இந்தியத் திரைப்படத்துறையினருடன் இலங்கைத் திரைப்படத் துறையினரும் ஒத்துழைக்கக்கூடிய முறையில் ஓர் ஏற்பாட்டைச் செய்து கூட்டுத் தயாரிப்பாகச் சில படங்களையாவது தயாரித்தால் இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமல்லாது சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல வெளிநாடுகளுக்கும் திரைப்படங்களை ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். இது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஒரு அவுன்ஸ்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழுள்ள கடைகளில் இம்மாதத்திற்குரிய [illegible] விநியோகிக்கப்படவிருக்கிறது. ஒரு கூப்பனுக்கு ஒரு அவுன்ஸ் [illegible] வழங்கப்படுகிறது.

கொழும்பில் 10 நாட்கள்

# ஆபத்து இன்னும் நீங்கவில்லை

பார்லிமென்ட் கூட்டத்தில் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா, அடுத்த மூன்று மாதங்களுக்கான அதிகப்படி வரவு—செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கையில், அவசர கால நிலைமைபற்றி விவாதம் நடக்குமென்று அறிந்ததும் அந்த மூன்று நாட்களும் அச் சபைக்குச் சென்றேன். எதிர்பார்த்ததைப் போல் பல விஷயங்களை அறிந்து கொள்ளமுடிந்தது.

பிரதமர் சிறிமா சபைக்கு வருவாரென்று எதிர்பார்த்தேன். மூன்று நாட்களும் அவர் வரவில்லை. அவருடைய இடம் காலியாகவே இருந்தது. அதே இடத்தில் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா அமர்ந்திருந்து எல்லாவற்றையும் கவனிப்பதுபோல் உணர்ந்தேன். பிரதமர் சிறிமா அங்கு வராத காரணம் எதுவாயினும், அவர் அங்கு பல உள்ளங்களிலும் அதிக சக்தியுடன் நிறைந்திருந்தார்.

பொதுமக்கள் பார்லிமென்ட் விசிட்டர் காலரிகளில் அனுமதிக்கப்படவில்லை. பொலிசும், பத்திரிகைக்காரர்களும் மட்டும்தான் மேலே இருந்து விவாதத்தை கவனிக்க அனுமதிக்கப்பட்டனர். விவாதமெல்லாம் அநேகமாக சிங்களத்தில்தான். நல்லவேளை பத்திரிகைக்காரர் கலரியில் உடனுக்குடன் மொழிபெயர்ப்பைக் கேட்கும் கருவி இருப்பதால், அதைக் காதில் வைத்துக்கொண்டு விவாதத்தை ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது. நடக்கும் விவாதத்தில் ஓரளவும் கூட பத்திரிகையில் வருவதில்லை. இடமில்லாததே முக்கிய காரணம். 'ஹன்சார்ட்' எனும் வெளியீட்டில் விவாதம் முழுதும் அப்படியே அச்சிட்டு இரண்டொரு நாளைக்குள் வெளியிடுகின்றார்கள். மூன்று மொழிகளும் தெரிந்தாலொழிய, விவாத முழு விவரத்தையும் தெரிந்து கொள்ள முடியாது.

ஏனெனில் சிங்களப் பேச்சுகளெல்லாம் அப்படியே சிங்களத்திலும் மற்றபடி தமிழ் ஆங்கிலப் பேச்சுகளையும் அதே மொழிகளிலும் வெளியிடுகின்றனர். சிங்களம் தெரியாவிட்டால், ஊமையராய், செவிடராய், குருடர்களாகிவிடுவோம். குறுக்குப் பேச்சுகளும் அவ்வப்போது நடக்கும் காரசாரமான வாக்குவாதங்களும் விவரமாக ஹன்சார்ட்டிலும் வெளிவருவதில்லை. பார்லிமென்டில் நடப்பதை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டிய உரிமை பொதுமக்களுக்குண்டு. இந்நாட்டில் வழங்கப்படும் மூன்று முக்கிய மொழிகளிலும் பேச சபையில் அனுமதித்திருக்கையில், மூன்றுமொழிகளிலும், பூரணவிவாதங்களையும் மொழிபெயர்த்து வெளியிடவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. இதற்குச் சற்றே செலவு ஆகும்தான். என்றாலும் ஜனநாயக ஆட்சியின் நன்மையை முன்னிட்டு, இச்செலவை பெரிதாக நினைக்கப்படாது. மூன்று மொழிகளிலும் 'ஹன்சார்ட்' வெளியாகுமென்றே பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

கிரியல்ல பிரதிநிதியான வாசுதேவ நாணயக்காரா பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு மேலும் மூன்று மாத 'லீவு' அளிக்கவேண்டுமென்று அரசாங்கம் கேட்டது. விசாரணையின்றி எம்.பி. மார்களை நீடித்து பாதுகாப்பில் வைப்பது சபைக்கே செய்யும் தீங்கென்றும், அவரை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்றும் காலி மெம்பர் தஹநாயக்கா சிங்களத்தில் பேசினார். அவர் மீதுள்ள குற்றத்தைக் கூறி அவரை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டார். எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர் ஜயவர்த்தனவும், இப்பிரேரணையை எதிர்த்துப் பேசினார். குறித்தமெம்பர் 'லீவு' வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தாரா? என்றும் வினவினார், சபை முதல்வர் அளித்த பதிலில், காலி மெம்பர் பிரதமராக இருந்த காலத்தில் விமல விஜயவர்த்தனவும் விசாரணையின்றி பலமாதம் சிறைப்படுத்தப்பட்டிருந்ததாகவும் இம்மாதிரி அவருக்காக 'லீவு' கேட்கப்பட்டதாகவும், சபை முதல்வர் மைத்திரிபால சேனநாயகா நினைவுபடுத்தி, கிரியல்ல மெம்பரின் சார்பாக அவரது கட்சியினர் கேட்டதற்கு இணங்கவே, 'லீவு' பிரேரணையைத் தாம் கொணர்ந்ததாகவும், இதைக் கொண்டுவராவிட்டால், அவர் தமது எம். பி. ஸ்தானத்தை சட்டப்படி இழக்கநேரிடுமென்று விளக்கியதும், இப்பிரேரணை எதிர்ப்பின்றி நிறைவேறியது.

**கே.பி.ஹரன்**

வருகிற அக்டோபரிலிருந்து டிசம்பர் மாதம் வரையிலுள்ள மூன்றுமாத வரவு—செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் சமர்ப்பித்திருந்தார். அதில் இராணுவத்துக்கான செலவுகள் பெரிதும் அதிகரிக்கப்பட்டிருந்தன. இதை வவுனியா பிரதிநிதி செல்லத்தம்பு சுட்டிக்காட்டி இராணுவத்துக்கு ஏன் அதிகம் செலவிடவேண்டுமென்று கேட்டார். பயங்கர இயக்க ஆபத்து இன்னும் நீங்கவில்லை என்றும், மீண்டும் இவ்வித கிளர்ச்சி தலைதூக்காமல் தடுக்க இராணுவம், பொலிஸ் இப்படைகளைப் பலப்படுத்த வேண்டிய அவசியமிருப்பதாகவும் நிதி அமைச்சர் பதிலளித்தார். பயங்கர இயக்கம் அடங்கிவிடவில்லை என்றும், இனியும் மிகக்கவனமாக இருக்க வேண்டியது அவசியமென்றும் இவ்விவாதத்திலிருந்து தெரியக்கூடியதாக இருந்தது.

திரு. டட்லி சேனநாயகா பிரதமராக இருந்தபோதே, பயங்கர இயக்கம் உருவாகி வருவதாக மூன்று அறிக்கைகளை ரகசியப் பொலிஸ் விசாரணை அதிகாரி ஜான் அட்டிகல தயாரித்து சமர்ப்பித்திருந்தார். கடைசி அறிக்கையில் எந்தெந்தப் பொலிஸ் ஸ்டேஷன்களைத் தாக்குவர் என்ற விபரங்களும் அடங்கியிருந்தன என்றாலும் ஏன் முன் கூட்டி தக்கபாதுகாப்புநடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை என்று திரு. டட்லி ஒரு கேள்வி கேட்டார். 'கிணறுவெட்ட பூதம் புறப்பட்டதுபோல்' இக்கேள்வி அவருக்கே பெரும் சங்கடமாக முடிந்தது. அந்த மூன்று அறிக்கைகளும் மாயமாக மறைந்துவிட்டனவென்றும், அவைபற்றி அவர் தமது சக மந்திரிகளுக்கும் தெரிவிக்காமல் ரகசியமாக வைத்துக்கொண்டிருந்ததாகவும், புதிய அரசாங்கத்திடமும் இதுபற்றி ஒன்றுமே சொல்லாமல் இருந்துவிட்டதாகவும், ஆகவே யாராவது ஒருவர் இன்றைய நிலைக்குப் பொறுப்பாளராயின் அவர் டெடிகமை பிரதிநிதியான டட்லியே என்று, சபை முதல்வர் மைத்திரிபால சேனநாயகா மிக ஆத்திரத்துடன் குற்றம் சாட்டினார். டாக்டர் கொல்வின், டாக்டர் என். எம். தேசப்பிரிய சேனநாயகா முதலியவர்கள் மூவரும் டட்லியையே குற்றம் சாட்டினர். அந்த மூன்று ரகசிய அறிக்கைகளைப் பற்றியும் தாம் தமது நிரந்தரக் காரியதரிசியாக இருந்தவரைக் கேட்டதற்கு, ஒரு ரகசியப் பெட்டிக்குள் வைத்திருந்ததாகவும் பத்துமாதமாகியும் அப்பெட்டியை புதிய நிரந்தரக்காரியதரிசி திறந்து பார்க்கவில்லை என்று தெரியவந்ததாகவும் திரு. டட்லி ஒரு சமாதானம் சொன்னார். அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்ததில் அவ்வறிக்கைகள் காணப்படவில்லை என்றும், நாட்டின் பாதுகாப்புப் பற்றிய அந்த அறிக்கைகளைப் பற்றி அவர் புதிய அரசாங்கத்திடம் கூறியிருப்பின், பயங்கர இயக்கத்தைத் தடுக்கத்தக்க நடவடிக்கை எடுத்திருக்கலாம்என்றும், அதிகாரிகளின் செயல்களுக்கு அமைச்சர்களேபொறுப்பேற்கவேண்டுமென்றும், சபை முதல்வர் காரசாரமாகக் குற்றம்சாட்டியபோது, முன்னாள் பிரதமர் டட்லி பாவம், வாய் திறக்கவில்லை. பார்லிமென்ட் சபை முன் அவர் மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டி விசாரணை நடந்ததுபோலிருந்தது அந்த விவாதம்.

(தொடரும்)

## கடனுதவி பற்றி ஆய்வு

கோட்டை, புதன்.

விவசாய அபிவிருத்திக்கு வங்கிகள் வழங்கிய கடனுதவிபற்றி மத்தியவங்கி ஆய்வொன்றை நடாத்துகிறது. 1967ம் ஆண்டிலிருந்து கூட்டுறவு வங்கி, மக்கள் வங்கி விவசாய அபிவிருத்திக்கு வழங்கிய கடனுதவிபற்றி இந்த ஆய்வு நடாத்தப்படுகிறது.

## ஆந்திர முதல்வர் ரெட்டி ராஜினாமாச் செய்தார்

விஜயவாடா, செப் 15

ஆந்திரா முதல்வர் திரு கே. பிரமானந்தரெட்டி இன்று தமது முதல்வர் பதவியை ராஜினாமாச் செய்தார். கவர்னரிடம் இன்று காலை 11 மணியளவில் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விருப்பத்தின் பேரிலேயே அவர் ராஜினாமாச்செய்தார். திரு பிரமானந்தரெட்டிக்கு வயது 63. 1964ல் பிரமானந்தரெட்டி பதவி ஏற்றார். திரு சஞ்சீவ ரெட்டியிடம் பொறுப்பை அப்போது ஏற்றுக் கொண்டார்.

உரியவரிடம் பொறுப்பை ஒப்படைக்கும்வரை; ரெட்டியைத் தொடர்ந்து பதவி வகிக்கும்படி கவர்னர் கேட்டுக்கொண்டார்.